Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (4-1-66) இதழ் 326

விசுவாவசு மார்கழி 20 றமழான் பிறை 11 செவ்வாய்க்கிழமை

## பொங்கலுக்கு சர்க்கரை கிடைக்குமா?

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழர் திருநாள் தைப்பொங்கலுக்கு யாழ்ப்பாணத்தில் சர்க்கரை கிடைக்குமா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் சர்க்கரைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தைப்பொங்கலுக்காவது சர்க்கரை கிடைக்குமா என்று மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இதுபற்றி உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியொருவரிடம் விசாரித்தபொழுது, யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கலுக்குச்சர்க்கரைகிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அனேகமாக அடுத்த வார ஆரம்பத்தில் சர்க்கரை இங்கு கிடைக்கலாம் என்றும் கூறினர்,

# கல்வி மந்திரி - ஜி. ஜி. இன்று சந்திப்பு

## ஆசிரியர் பிரச்னை பற்றிப் பேசுவர்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழாசிரியர் இடமாற்றத் திட்டம் சம்பந்தமாக கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையை யாழ்ப்பாணம் எம். பி திரு. ஜி. ஜி பொன்னம்பலம் இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து சுமார் நானூறு ஆசிரியர் வடமாகாணத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை வடமாகாண ஆசிரிய சங்கங்கள் சில எதிர்த்திருப்பதுடன் இடமாற்ற உத்தரவு பெற்ற ஆசிரியர்கள் பலரும் ஆட்சேபித்துள்ளனர்.

இடமாற்றத்துக்கு ஒரு நிரந்தரமான திட்டம் உருவாக்கப்படும்வரை இந்த இடமாற்றங்களை நிறுத்தி வைக்க உதவி புரிய வேண்டுமென ஆசிரியர்கள் பலர் திரு. பொன்னம்பலத்தைக் கொழும்பில் சந்தித்துக் கேட்டுக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

## ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற் சங்கங்களின் ஆட்சேபம்

வெள்ளவத்தை, திங்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் கத்தோலிக்கர்களுக்கு மட்டும் இரண்டு மணிநேரம் லீவு வழங்குவதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இலங்கை போக்கு வரத்துச்சபை, புகையிரதசேவை, துறைமுகம் ஆகியவற்றைச் சேர்ந்த இத்தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் குறிப்பிட்டநேரத்துக்கு முன்பாக வேலையை நிறுத்திக்கொண்டனர்.

கத்தோலிக்கருக்கு மட்டுமன்றி எல்லாருக்கும் லீவு கொடுக்க வேண்டுமென்றும் முன்னர் பௌத்தர்களுக்கு இதுபோன்ற 2 மணிநேரம் லீவு வழங்கப்படவில்லையென்றும் இத்தொழிற்சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## தராதரத்தை உயர்த்த கல்வி அமைச்சு புதிய திட்டம்

வெள்ளவத்தை, திங்கள்

கல்வி தராதரத்தை உயர்த்துவதற்காக பல பாடங்களையும் படிப்பிக்கும் ஆசிரியர்களைக் கொண்டதான மாகாணக் கமிட்டிகளை கல்வி அமைச்சு நிறுவ முடிவு செய்துள்ளது.

இந்தக் கமிட்டி ஒவ்வொரு தவணைக்குரிய பாடத்திட்டத்தை பற்றி விரிவான முறையில் வரையறை செய்யும். இவர்கள் அந்தந்த தவணைக்குரிய கேள்விகள், அப்பியாசங்கள் ஆகியவற்றையும் ஏற்படுத்துவர். ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று ஆசிரியர்கள் வீதம் சகல பாடங்களுக்கும் அடங்கும் வகையில் ஆசிரியர் இந்தக் கமிட்டியில் இடம் பெறுவர்.

வித்தியாதிபதி திரு. அல்விஸ் மாகாண கல்வி அதிகாரிகளுக்கு இது பற்றி உடனடியாக கமிட்டிகளை நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார். எழுத்துப் பரீட்சைகள் நடத்தமுடியாத முதலாவது கிரேடிலுள்ள மாணவர்களுக்கும் குறிப்பிட்ட பாடத் திட்டத்தை அமைக்கும்படி வித்தியாதிபதி கேட்டுள்ளார்.

இன்னும் இரு வாரங்களுக்குள் இதுபற்றி முதலாம் வகுப்பு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையின் பாடத்திட்டங்களை அமைக்கும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தவணைப் பரீட்சையின் முடிவுகளை மாணவர்களின் பெற்றோர்களுக்கு அறிவிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கல்வித் தராதரக் குறைவுக்கு ஆசிரியர்களை வித்தியாதிபதி குறை கூறியுள்ளார். அவர்கள் குறிக்கப்பட்ட காவத்துக்குள் கல்வி முறையை பாடசாலைகளில் ஏற்படுத்தாமல் இருப்பதும் மேலதிக லீவு எடுப்பதும் மூன்று குற்றச்சாட்டுகளை அவர் சுமத்தியுள்ளார்.

## வினாத்தாள்களில் மோசடி செய்பவருக்கு சிறை

### கல்வி மந்திரி முடிவு

பம்பலப்பிட்டி, திங்கள்

பரீட்சை வினாத்தாள்களில் மோசடி செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க கல்வி மந்திரி முடிவு செய்துள்ளார்.

வினாத்தாள்களை திருடுபவர்களுக்கோ, அல்லது இவற்றைபிறருற்கு விற்பனை செய்பவருக்கோ அல்லது வினாத்தாள் உத்தியோகபூர்வமாக வெளிவரமுன் பிறருக்கு அறியப்படுத்துபவருக்கோ கட்டாய சிறைத்தண்டனை வழங்கும்வகையிலான ஒரு சட்டத்தைக் கொண்டுவர கல்வி மந்திரி முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இதன்படி வினாத்தாள்கள் வெளிவரமுன் அந்த வினாத்தாள்களில் அடங்கியிருப்பவற்றை வெளிப்படுத்துதல் தட்டனைக்குரிய குற்றமாக இருக்கும். இக்குற்றத்திற்கு உடந்தையாக இருப்பவர்களும் தண்டனைபெறுவார்கள்

## நாளை இங்குவரும் ஜி. ஜி. க்கு வரவேற்பு ஏற்பாடு

### ரதம் போன்ற மோட்டாரில் பவனியாகச் செல்வார்

யாழ்ப்பாணம், செவ்.

ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் இலங்கைக் கோஷ்டியின் தலைமைப் பிரதிநிதியாகச் சென்று இலங்கையின் கருத்துக்களை திறமையாகவும் ஆணித்தரமாகவும் உலக நாடுகளுக்கு உணர்த்திவிட்டு நாளை காலை யாழ்ப்பாணம் வந்துசேரும் யாழ்ப்பாணம் எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு மகத்தான வரவேற்பளிப்பதற்கு தமிழ்க்காங்கிரஸ் கிளைகளும் ஆதரவாளர்களும் ஒழுங்குசெய்துள்ளனர்

ரதம்போல் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் வண்டியில் திரு. பொன்னம்பலத்தை ஏற்றி பலாலி விமான நிலையத்திலிருந்து முக்கிய வீதிகள் வழியாக அவரைப் பவனியாக அழைத்துவருவதற்கும் தங்கமாலை தொடக்கம்விலை உயர்ந்த பொருள்களை அன்பளிப்பாக வழங்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

நாளை காலை 8-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கும் திரு. பொன்னம்பலத்தை வரவேற்புக்குழுவினரும்தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகிகளும் முதலில் வரவேற்று மாலை [illegible] விமானநிலையத்தில் வேதியர் ஆசீர்வாதமளித்தபின் காலை 9 மணிக்கு அன்பர்களும் ஆதரவாளர்களும் அவருக்கு மாலைகள் சூட்டுவர். விமான நிலையத்திலேயே மயிலிட்டிக் கிராம சபையும் அவருக்குவரவேற்பளிக்கும். காலை 9-30க்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அதிபரின் சேவைக்கு விளையாட்டுச் சங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்டார்.

''வருங்காலத்தில் சிறந்த வீரர்களையும் அறிஞர்களையும் உருவாக்கும் ஸ்தானமாக யாழ்ப்பாணம் விளங்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.''

யாழ்ப்பாண மாவட்ட பொதுச்சேவை விளையாட்டுச் சங்கத்தின் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''நாட்டின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானவைகளில் விளையாட்டுத் துறையும் ஒன்று என்பதை தேசியஅரசாங்கம் உணர்ந்து இதற்கான ஒரு இலாகாவை ஏற்படுத்தியதால் விளையாட்டுத்துறையின்அவசியத்தை எல்லோரும் உணருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்நட்டுள்ளது'' என்றும் திரு. நெவில் ஜெயவீரா தமது பேச்சின்போது குறிப்பிட்

யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றலாகிச் சென்றுள்ள அரசாங்க அதிபர் திரு. நெவில்ஜெயவீராவின் சேவையைப் பாராட்டியும் கூட்டத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பொதுச்சேவை விளையாட்டுச் சங்கத்தின் தலைவராக இதுவரைகாலமும் கடமையாற்றிய திரு. நெவில்ஜெயவீரா இடமாற்றலாகிச்செல்வதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மறியல்சாலைப்பகுதி உதவிஅதிபர் திரு. ஞானசுந்தரம் தற்காலிகமாகத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

யாழ். காரியாதிகாரி திரு. திலகஞானம், திரு. ஈ. கே. குமரையா, திரு. எஸ். மயில்வாகனம், திரு. கே. கணேசராசா, திரு. தங்கராசா ஆகியோரும் கூட்டத்தில் உரைநிகழ்த்தினர்.

## தலைமை ஆசிரியர்களுக்கு கூடிய அதிகாரம் வழங்கப்படும்

### கல்வி அமைச்சு முடிவு

வெள்ளவத்தை. திங்

அரசாங்க பாடசாலைகளிலுள்ள முதலாம் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு கூடிய அதிகாரத்தை வழங்க கல்வி அமைச்சு முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

1960-ம்ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்பாக அரசியல் தலையீட்டின் காரணமாகவும்நேர்மையற்றதன ஆசிரியர் இடமாற்றத்தினாலும் தலைமை ஆசிரியர்கள் முறையான நிர்வாகத்தை மேற்கொள்ளமுடியவில்லை யென்றும் கைப்பொம்மைகளாகவே இருந்திருக்கிறார்களென்றும் கல்வி அமைச்சுக்கும் ஆசிரியர் சங்கங்களுக்குமிடையிலுமான பேச்சுவார்த்தைகளின்போது பல முறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனி வரும் காலத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் ஆசிரியர்களின் நியமனம் ஆகிய விடயத்தில் தலைமை ஆசிரியர்கள் இப் புதிய திட்டத்தின் பிரகாரம் கலந்துஆலோசிக்கப்படுவர்

## கொல்லப்பட்டனர்

சைகோன், ஜன. 3

புதுவருடத்துக்கு முந்திய தினத்திலிருந்து நேற்று வரை 200 வியட்காங்கினர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்று இரண்டு காரியங்கள் தான் மிகவும் தேவை. முதலாவது, ஏழை எப்படி வாழ்கிருன் என்பதைப் பணக்காரன் அறியவேண்டும்; இரண்டாவது, பணக்காரன் எப்படி உழைக்கிருன் என்பதை ஏழை அறியவேண்டும்.

—இ. அட்கின்ஸன்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 20 உ (4-1-66)


## எட்டாம் வகுப்புத் தெரிவுப் பரீட்சை

எட்டாம் வகுப்பு மாணவர்கள் எல்லோருக்கும் பொதுப் பரீட்சை ஒன்றினை நடத்தி, திறமை உள்ள மாணவர்களை மட்டும் உயர்தரக் கல்வி பெற அனுமதிப்பதென்றும், இப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி மாணவர்கள் தரம்பிரிக்கப்பட்டுதிறமையானசித்தி பெற்ற மாணவர்களை வைத்தியம், விஞ்ஞானம், பொறியியல், கலை ஆகியன கற்க அனுமதிப்பதென்றும் கல்விஅமைச்சு திட்டமிட்டுள்ளதாம். எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுப் பரீட்சை வைப்பதென்ற கல்வி அமைச்சின் உத்தேசத்திட்டம் எப்படிப்பட்டதென்பது பற்றியோ, இப்பரீட்சை எப்படியிருக்குமென்பது பற்றியோ திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை. இந்த உத்தேச பொதுப் பரீட்சை பொது அறிவுப் பரீட்சையாக இருக்குமா என்பதும் தெரியவில்லை. இங்கிலாந்தில் அல்லது பிரான்ஸில் போன்று இது ஒருதெரிவுப்பரீட்சையாக இருக்குமானுல், இப்பரீட்சைபற்றிய முன் அனுபவம்இலங்கைக்கு இல்லாததால், அவசியம் நேரின் வெளி நாட்டிலிருந்தாவது, கல்விநிபுணர்களின் ஆலோசனைகளை இவ் விஷயத்தில் பெறவேண்டும். இந்தப் பரீட்சை பற்றிப் போதிய விபரம் கொடுக்கப்பட வேண்டியதுடன் போதிய அவகாசமும் அளிக்கப்படவேண்டும்.

எட்டாம்வகுப்பு மாணவர்களுக்கென நடத்த உத்தேசித்துள்ள பொதுப் பரீட்சை வேலை யாவையும் கல்வி இலாகாவிலுள்ள 'நிபுணர்களிடம்' தான் கல்வி அமைச்சு ஒப்படைக்க போகிறதா? சில வருடங்களுக்கு முன் தெரிவுப்பரீட்சை ஒன்று நடைபெற்றதை நாம் அறிவோம். மொழி, கணிதம், பொதுஅறிவு ஆகிய மூன்று பாடங்களில் இப் பரீட்சை நடத்தப் பட்டது. இப்பரீட்சை இறுதியில் மிகச் சுலபமாக்கப் பட்டதால் பெருந்தொகையான மாணவர்கள் இதில் சித்தியெய்தினர். இப்பொழுது கல்விஅமைச்சு உத்தேசித்துள்ள பொதுப்பரீட்சையின் பொதுவான கொள்கை என்ன?

இங்கிலாந்தில் இலக்கணப்பாடசாலை, தொழில் நுட்பப்பாடசாலை, நவீனப்பாடசாலை என பிரிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் விஞ்ஞானம், கலை, விவசாயம் என கல்வித் துறையைப் பிரித்து வகுக்க திட்டமிடப்படுவதாகவும் கூறப்படுகிறது. பிள்ளைகளை இவ்விதம் கோஷ்டி, கோஷ்டியாகப பிரித்தால், அதன் விளைவாக செல்வந்தர்களின் பிள்ளைகள், தனிப்பட்ட முறையிலும்ஆசிரியர்களை அமர்த்திவீட்டிலும் கல்வி கற்று அதன்பயனுக விஞ்ஞானக் கல்வியில் அவர்களே சித்திபெற்று என்ஜினியர் வைத்தியர், ஆக அவர்களே வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். இதனுல் வாழ்க்கை வசதி குறைந்த வறிய, எளிய குடும்பத்தைச் சேர்ந்த கிராமப்பிள்ளைகள்பெரும் பாலும் விவசாயத் துறையிலும் கடற்றொழிலுமே ஈடுபடவாய்ப்புக் கிடைக்கும்.

இது தேசிய நலனுக்கு ஏற்றதாகுமா? கல்விப் பயிற்சிக்கும் கல்வியற்ற தொழில் பயிற்சிக்கும் மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். கல்வி கற்கும் மாணவர் அனைவருக்கும் பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். இந்த அடிப்படையில்தான் எந்தப் பரீட்சையும் இருக்க வேண்டுமேயொழிய வாழ்க்கை வசதியுடையவர்களுக்கு உயர்தரக்கல்வியும் விஞ்ஞானக் கல்வியும் கிடைக்கவும் வசதியற்ற பிள்ளைகளுக்குஉயர் கல்வி [illegible] கிடைக்காமல் தொழில்செய்யும் வாய்ப்புக்கிடைக்கவும் கூடியதாக இருக்கக் கூடாது. விவசாயம்,தொழில் நுட்பம் [illegible] ஆகியவைகளிலும் நவீன முறைகளைக் கையாள வேண்டியதுஅவசியமாகையால் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எத்துறையில் நாட்டம் கொண்டவர்களாக இருப்பினும் அவர்களுக்கு உயர்தரக்கல்வி கிடைக்ககூடியதாகவே பரீட்சைகள் இருக்க வேண்டும். உயர்தரக்கல்வி பெருமல் சில மாணவர்களைக் கழித்துவிடக்கூடியமுறையில் பரீட்சைகள் இருக்கக் கூடாது.

செயற்கை முறையில் தெரிவுப்பரீட்சைகளை நடத்தும் திட்டத்தை அவசரப்பட்டு அமுலுக்குக் கொண்டுவருவதற்குமுன் இந் நாட்டிலுள்ள கல்விமான்களின் கருத்தை கல்வி அமைச்சு தெரிந்து கொள்ள வேண்டும்.

---

## நிதிமந்திரியின் விளக்கம்

யப்பகூவா, திங்கள்

'1956ம்வருடத்துக்குமுன்னர் நாம் போதியளவு அத்தியாவசிய உணவுப்பொருள்களை இறக்குமதி செய்ய வாய்ப்பிருந்தது. அப்போது எமது வெளிநாட்டு மூலதனம் போதியளவு இருந்தது. ஆனுல் தற்போது அந்நிய செலாவணி நிலைமை மிகமோசமாக இருக்கிறது. இதனுல்நாம் இறக்குமதியில் அதிகம் செலவுசெய்யவேண்டியிருக்கிறது. பொருள்களின் விலைஉயர்வுக்குக் காரணம் இதுவே' என நிதி மந்திரிதிரு. யு. பி. வன்னிநாயகா யப்பகூவா விஜயபா மத்திய கல்லூரியில் நடைபெற்ற யப்புகூவா எக்சத் வெலந்த சங்கமயாவின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

# சட்டங்களை தமிழாக்கும் பணி

— வி. கார்த்திகேயன் —

(நேற்றைய தொடர்ச்சி)

3. தமிழை மேலும் வளப்படுத்துவது அவசியமெனக் கருதி, முந்திய ஆண்டுகளில் வெளிவந்துள்ள நூல்களையும் ஓரிடத்தில் தொகுத்துப் போற்றும் பணியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. மொழித் துறையிலும் கலைத் துறையிலும் இன்னும் பல துறைகளிலும் உழைப்போர்க்குப் பயன்படும்வகையில், இதற்குமுன் வெளிவந்துள்ள நூல்களையும் ஒருங்குத் தொகுத்து வைக்க, தமிழக அரசு, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் வாயிலாகத் தக்க முயற்சிசெய்துவருகின்றது. இந்த முயற்சியில், தமிழ் நூல் விவர அட்டவணை வெளியிடும் வேலை, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் மிகச் சிறந்த பணியாக அமைந்துள்ளது. 1867-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை பதிவு செய்யப்பெற்ற தமிழ் நூல்களுக்கு விவர அட்டவணை தயாரிப்பது, மன்றத்தின் குறிக்கோளாகும். இதுவரை 1867 முதல் 1910 வரை வெளிவந்து பதிவு செய்யப் பெற்ற நூல்களுக்கு விவர அட்டவணைகள் வெளியிடப் பட்டுள்ளன. ஆசிரியரின் பெயர், பதிப்பாசிரியரின் பெயர், நூல் விளக்கும் பொருள் முதலிய விவரங்கள் இத்தொகுப்புக்களில் அடங்கியுள்ளன. இத்தொகுப்புக்கள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன் படும்.

### மொழிபெயர்ப்புப் பிரிவு

ஆங்கிலத்தைப் பல்லாண்டுகளாக நாம் பயன்படுத்தி வருகிறேம். ஆட்சி மொழியாகத் தமிழ்மொழி அறிவிக்கப்பட்டபின், ஆங்கிலத்தோடு தமிழையும் சேர்த்து எழுதிவருகின்றேம். படிப்படியாகப் பெருகித் தமிழ் மொழி முழு ஆட்சிபெறும் வரை, இந் நிலை இருக்குமன்றே? எனவே, மொழி பெயர்ப்பு முக்கிய இடம் பெறுகின்றது. இப்பணியைச் சீரிய முறையில், தமிழ் நாட்டு அரசின் மொழி பெயர்ப்புப் பிரிவு ஆற்றி வருகின்றது. இதன் தலைவராக மொழி பெயர்ப்புக் கூட்டு இயக்குநர் விளங்கி வருகின்ருர்.

தமிழ் நாடு அரசாங்கம் இயற்றும் சட்ட மன்ற மசோதாக்கள், சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், விதிகள், அறிவிப்புக்கள் இவையனைத்தையும் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் நாடு அரசாங்க இதழில் வெளியிடுவது, இப்பிரிவின் முக்கிய அலுவலாகும். அந்தந்த மாவட்ட அரசிதழ்களில் வெளியிடவேண்டிய அறிவிப்புகளும், இப்பிரிவிலிருந்தே தமிழாக்கம் செய்து அனுப்பப்படுகின்றன. மத்திய அரசாங்கச் சட்டங்களுக்கும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் முக்கியமான சில மசோதாக்களுக்கும், தமிழ் மொழிபெயர்ப்புத் தேவையென்று கேட்கப்படும் போது, அவை அவ்வாறே மொழி பெயர்க்கப்படுகின்றன.

பற்பல செயலகத் துறைகள், மாவட்டக் கலெக்டர்கள், துறைத் தலைவர்கள் ஆங்கிலத்தில் அனுப்புகிற அறிவிப்புகள் அனைத்தும், தமிழிலும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, [illegible] பட்டால் அந்தந்த மொழிகளிலும் மொழிபெயர்க்கப் படுகின்றன. தமிழ் நாட்டில் ஆந்திரா, மலையாளிகள் போன்ற சிறுபான்மை வகுப்பினர் வசிக்கும் பகுதிகளிலிருந்து அரசாங்கத்திற்கு அவரவர் மொழிகளில் மனுக்கள், முறையீடுகள் முதலியன வந்தால், அவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, அந்தந்தத் துறைத் தலைவர்களின் கவனத்திற்கு அனுப்பப்படுகின்றன. தமிழ் நாட்டிலிருந்து பொதுமக்கள் மத்திய அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்க அமைச்சர்களுக்கும் ஹிந்தியில் அனுப்புகிற மனுக்கள்கூட, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டு, அந்தந்தத்துறைத் தலைவரின் கவனத்திற்கு அனுப்பப்படுகின்றன. இவற்றிற்கென சிறுபான்மையினர் மொழிபெயர்ப்புக் குழு ஒன்று இப்பிரிவில் செயலாற்றுகிறது.

தமிழ் நாட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் அனுப்பும் கேள்விகள் அனைத்தும், தமிழில் மொழி பெயர்க்கப் பட்டு, சபை நடக்கும்போது கேள்வி நேரத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற கேள்விப் பட்டியல்களைத் தமிழில் தயாரித்துக் கொடுப்பது, இப்பிரிவின் மற்றெரு முக்கிய அலுவலாகும். அக் கேள்விகளுக்கு மன்றத்தில் அமைச்சர்கள் அளிக்கும் பதில்களும், தமிழாக்கம் செய்துதரப்படுகின்றன. மற்றும் மன்ற நிகழ்ச்சி நிரல்கள், தீர்மானங்கள், அவசரப் பிரேரணைகள் போன்ற இவையனைத்தும் தமிழ்ப் படுத்தப்படுகின்றன. தேவையான மன்ற வெளியீடுகள் அனைத்தையும், தமிழில் வெளியிடுவதும் இப்பிரிவின் கடமையாகும்.

நிதி அமைச்சரின் பட்ஜட் உரை, பற்பல வெளியீடுகள், துணை மானியக் கோரிக்கை உரை, வெளியீடுகள் இவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துத்தருவதும், இப்பிரிவின் முக்கிய பணிகளில் ஒன்று.

இவற்றைத் தவிர, தமிழ் நாடு அரசாங்கம் வெளியிடும் சுகாதார வெளியீடுகள், சிறு நூல்கள் போன்றவற்றைத் தமிழ்ப்படுத்தித்தருவதும், அந்தமொழிபெயர்ப்புப் பிரிவின் பணியாகும்.

மற்றும் ரயில்வே போன்ற மத்திய அரசாங்க துறையினருக்கும், துறைமுகக் கழகம், மின்சார போர்டு போன்ற அரசாங்கச் சார்புள்ள நிறுவனங்களுக்கும், இப்பிரிவு தேவைப்படும் போது, அவற்றின் சட்ட திட்டங்களைத் தமிழில் மொழி பெயர்த்துத்தருகிறது.

ஆங்கிலத்திலிருந்து நம் உள்ளம் விரும்பும் அழகிய தமிழுக்கு மாறிவரும் நிலையில், மொழிபெயர்ப்புப் பிரிவு ஆற்றிவரும் அரிய தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியது.

### சட்டச் சொற்கள் அமைப்புக் குழு

நீதிமன்ற நடவடிக்கைகள் மக்கள் புரிந்துகொள்ளும்வகையில் அமைதல் வேண்டும். சட்ட நூல்களும், நீதி மன்றத் தீர்ப்புகளும், தாய் மொழியில் இருந்தால்தான், அவற்றை அனைவரும் எளிதில் அறிந்து கொள்ள முடியும். சட்டக் கல்லூரியில் பாடங்களைத் தமிழிலேயே நடத்தவேண்டுமென்ற எண்ணமும் தோன்றியது ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களையும் விதிகளையும் தமிழில் மொழிபெயர்க்கும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே, சட்டங்களைத் தமிழாக்கும் முயற்சியில், அரசாங்கம் கவனம் செலுத்தத் தலைப்பட்டது.

ஆங்கிலத்திலுள்ள சட்டச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியை மேற்கொள்ள, மாநில அரசு, 1957-ல் ஒரு சட்டச்சொற்

(6-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

கொழும்புக்குச் சென்றிருந்தநண்பர்ஒருவரின்பையன் தெகிவளையில் உள்ள மிருகக் காட்சிச்சாலைக்கும் சென்றிருந்தானும். அவன் அங்குள்ள பறவைகள் மிருகங்களைப்பற்றியெல்லாம் என்னென்னவோ அளந்து கொட்டினுன். 'புலியைப் பார்த்தேன்' என்று அவன் சொன்னதுதான் "எங்கே, எங்கே" என்று வீதியில் சென்ற ஓர் அன்பர் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தார்.

"என்ன ஐயா ஏன் இப்படிப் பயந்தடிக்கிறீர்கள்? புலி என்றதுமே இப்படியென்ருல்...." என்று நான் வார்த்தையை முடிக்குமுன்னமே, "புலியா? நான் புளி என்றல்லவா நினைத்தேன். அதுதான் எங்கே இருக்கிறது" என்று விசாரிக்கலாமென வந்தேன் என்ருர் பெரும் கவலையுடன்.

புலியைப் பார்த்தாலும் பார்க்கலாம் யாழ்ப்பாணத்தில் புளியைப் பார்ப்பது சுலபமல்ல.

ஃ ஃ ஃ

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் காலத்தில்கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் பதுக்கல்வேட்டை நடைபெற்றது யார் யாருக்கெல்லாமோ அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த வேட்டையால் சிலபொருள்கள் வெளிவந்தன. பலருக்கும் ஆறுதல் கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் பதுக்கல்வேட்டை நடத்திய அப்போதைய அரசாங்க அதிபர் பதுக்கல் பொருள்கள் பலவெளிவந்ததும் "யாழ்ப்பாணத்தில் சர்க்கரையைத் தவிர இதர பொருள்களுக்குத் தட்டுப்பாடு கிடையாது" என்ருர். அவரின் வாய்க்கு ஒரு பிடி சர்க்கரையாவது இப்பொழுது கிடைக்கும் ஆனுல் புளிமட்டும் கிடைக்காது.

புலி பதுங்குவது நல்லதற்கல்ல என்பார்கள். புளி பதுங்கியிருப்பது எதற்கோ?

ஃ ஃ ஃ

ஈரவெங்காயத்துக்கு யாழ்ப்பாணத்திலும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதால் சில தினங்களுக்குமுன் ருத்தல் 50—60 சதம் விற்ற வெங்காயம் இப்பொழுது 30 சதத்துக்குக் கிடைக்கிறது. உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கக்கூடாது என்பது பொதுவிதி. ஆனுல் இப்பொருள்கள் வெளியூரில் விற்கும் விலையைவிட உள்ளூரில் அதிக விலைக்கு விற்கப்பட்டால் அவற்றுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டியது அவசியமே.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பச்சைமிளகாய் இப்பொழுது ருத்தல் ஒரு ரூபாய் இருபது சதமாகவும் கத்தரிக்காய் ருத்தல் எண்பது சதமாகவும் வாழைக்காய் ஒன்றின் விலை 20—25 சதமாகவும் உச்ச விலையில் உள்ளது. போஞ்சி கோவா முதலிய காய்கறிகளின் விலைபற்றி சொல்லத் தேவையில்லை.

உருளைக்கிழங்கும் மரவள்ளிக்கிழங்கும்தான் மலிவு விலையில் கிடைக்கக்கூடிய பொருள்கள். எத்தனை நாளைக்கு கிழங்கைச் சாப்பிடுவது?

-- ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் கவனத்தை ஈரும் டாஷ்கண்ட்

## சரித்திரபூர்வமான பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகின்றன

டாஷ்கண்ட் (ரஷ்யா) ஜன. 3

இப்பொழுது உலகின் கவனத்தை ஈர்த்திருக்கும் டாஷ்கண்ட். முன் என்றுமே இல்லாத வகையில் கோலாகலமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. பலவிதமான நிறங்களைக்கொண்ட கடதாசிகளின் சோடனைகளும் மின்சார வெளிச்சங்களின்கண்ணைப் பறிக்கும் அலங்காரங்களும் வரவேற்பு வளைவுகளும் வாழ்த்துச்செய்திகளும், டாஷ்கண்டுக்கு ''புத்துணர்ச்சியை'' ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்திய பாகிஸ்தான் தலைவர்களின் சந்திப்பு குறித்து ஏற்கனவே இங்கு வந்திருக்கும் இந்திய, பாகிஸ்தான் விசேஷ செய்திநிருபர்கள், 'டாஷ்கண்ட் வரவேற்புகள் பிரமாதம்'' என்று வருணித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் இன்று இங்குவந்து சேரவிருக்கிறார்கள். இன்று பகல்வரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்பிரகாரம் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் முதலில் இங்குவந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய - பாகிஸ்தான் தலைவர்களை வரவேற்பதற்காக இங்கு பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின் ஏற்கெனவே இங்குவந்திருக்கின்றார். இவருடன் ரஷ்ய வெளிநாட்டு மந்திரியும், பாதுகாப்பு மந்திரியும் இங்கு வந்திருக்கின்றார்கள்.

### மும்மொழிகளில் வரவேற்பு

டாஷ்கண்ட் பிரதானவீதிகள்தோறும் பெரிய அளவில் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன்முன்னர், ஆங்கிலம் உருது, ரஷ்ய மொழிகளில் இந்திய பாகிஸ்தான் தலைவர்களை மனப்பூர்வமாக வரவேற்கும் வாழ்த்துச் செய்திகள் எழுதப்பட்டிருக்கின்றன.

### சந்திப்பு நிகழும் இடம்

அதிபர் அயூப்கானும் பிரதமர் சாஸ்திரியும் சுப்ரீம் சோவியத் கட்டத்திலுள்ள விசேஷ அறையில் பேச்சுக்கள் நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### 18 வருடகால நெருக்கடி

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கடந்த 18 வருட காலமாக நீடித்து வரும் காஷ்மீர் உள்ளிட்டு பல நெருக்கடிகளும் டாஷ்கண்ட் சந்திப்பில் தீர்க்கப்படவேண்டுமென்று பலதலைவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதன்பலாபலன் நாளைமுதல் தெரியவரலாம்.

### இன்று ஆரம்பம்

இந்திய-பாகிஸ்தான் தலைவர்கள் செவ்வாய்க்கிழமை தங்களது பேச்சுக்களை ஆரம்பிக்கின்றனர்.

---

பிரச்னைகள் தீராவிடினும்

## பலாத்காரத்தை நிறுத்துவோம்

### சாஸ்திரி கோரிக்கை

புதுடில்லி, ஜன. 3

"நாம் நடத்தவிருக்கும் முக்கியமான பேச்சு வார்த்தைகள் ஒருசமயம் தோல்வியில் முடிவடைந்தாலும் அல்லது தீர்வுகாண முடியாத ஒரு கட்டத்தை அடைந்தாலும் ஒன்றைமட்டும் நிச்சயமாகத் தீர்மானித்துவிடுவோம். எமது பிரச்னைகளை, நெருக்கடிகளைத் தீர்த்துவைக்க பலாத்காரம் பிரயோகிப்பதில்லை என்றதொரு உடன்பாட்டுக்கு நாம் இருவரும் வந்துசேருவோம்." என்று இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி டாஷ்கண்ட் பேச்சுக்கள் குறித்து பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கு விடுத்த ஒரு உருக்கமான செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் சாஸ்திரி இன்று காலை பத்து மணியளவில் புதுடில்லியிலிருந்து விசேஷ விமானமூலம் டாஷ்கண்டுக்குப் பயணமானார். அவரை, மந்திரிகளும் துணை மந்திரிகளும் எம். பி. க்களும் பெருந்திரளான மக்களும் விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தனர்.

நேற்று இரவு இந்திய — சோவியத் கலாச்சார சங்கம், பிரதமர் சாஸ்திரிக்கு ஒரு விருந்துபசாரமளித்தது.

அதில் அவர் பேசுகையில்; டாஷ்கண்ட்பேச்சுகள் வெற்றி வெற்ருல் அது இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே நன்மை பயக்குமென்றும் ஆனல் எதிர்பாராத வகையில் தோல்வியுறுமானல் முடிவு சொல்லமுடியாத பயங்கர விளைவுகளாகவிருக்கும் என்றும் கூறினர்.

''இந்த நல்ல முயற்சிக்காக நாம் சோவியத் யூனியனை வெகுவாகப் பாராட்ட வேண்டும். ஆனல் பேச்சுக்களில் தோல்வி ஏற்படுமானல் அதற்காக ரஷ்யாவைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை'' என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

## டாஷ்கண்ட் பேச்சுக்கு சீன முட்டுக்கட்டை

### அமெரிக்காவுடன் சேர முயல்வதாக ரஷ்யாமீது பாய்ச்சல்

பீகிங், ஜன. 3

இந்திய — பாகிஸ்தான் நெருக்கடிகளுக்கு ஒரு சமாதானத் தீர்வைக் காணும் முயற்சியில் இருநாட்டுத் தலைவர்களும் டாஷ்கண்டில் சந்திக்கும் அதேவேளையில் இதற்கு எதிரான இயக்கத்தில் சீன இப்பொழுது ஈடுபட்டுள்ளது.

டாஷ்கண்ட் பேச்சுக்களுக்கு வழிவகுத்த ரஷ்யாவுக்கு எதிராக, சோவியத் எதிர்ப்பு பிரசார இயக்கமொன்றை கம்யூனிஸ்ட் சீன ஆரம்பித்துள்ளது.

''டாஷ்கண்ட் பேச்சுக்கள் உண்மையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெறுவதல்ல. இந்த ஏற்பாட்டின் மூலம் அமெரிக்காவுடன் சேர்ந்துகொள்ள ரஷ்யா முயற்சிக்கிறது. அமெரிக்க-ரஷ்ய உறவு அபிவிருத்தியின் ஒரு திட்டமே டாஷ்கண்ட் சந்திப்பு'' என்று சீன அரசாங்க பத்திரிகை தெரிவித்துள்ளது.

---

## உல்லாசப் பிரயாணிகளை கவர..

ஸ்ரீநகர், ஜன. 3

ஜம்மு காஷ்மீரில் உல்லாசப்பிரயாணிகளைமேலும் கவருவதற்காக முப்பத்தி நான்கு லட்சம் ரூபாவை செலவழிக்க காஷ்மீர் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

---

## டாஷ்கண்ட்

மாஸ்கோ, ஜன.2

இந்திய - பாகிஸ்தான் தலைவர்கள் நாளை(செவ்வாய்க்கிழமை) சந்திக்கவிருக்கும் டாஷ்கண்ட்; சோவியத் மத்திய ஆசியாவில் இருக்கும் மிகப் பெரிய நகரமாகும். இந்த நகரம், ரஷ்ய-சீன எல்லையிலிருந்து 500 கிலோமீட்டர் தூர முள்ளது. (பி.டி,ஸி.)

---

## ஒப்பந்தம் முறிவு

ஹனேய், ஜன. 3

அரிசி ஒப்பந்தத்தை சீன முறித்துக்கொண்டுவிட்டதாக கியூபா அறிவித்துள்ளது.

---

## பேர்லின் சுவரை தாண்டிய ஜோடிகள்

மேற்குபெர்லின், ஜன.3

இருபது வயதுள்ள கிழக்கு ஜெர்மன் எல்லைப் பாதுகாப்பாளர் ஒருவர் பதினறு வயதுள்ள கிழக்கு ஜெர்மன் மங்கையுடன் மேற்கு பெர்லினுக்குள் தப்பி ஓடிவிட்டதாக மேற்குபெர்லின் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த இளைஞர் சாதாரண உடை அணிந்திருந்தாரென்றும், அவர்கள் முள்ளுக்கம்பிகளைக் கடந்துசென்றனர் என்றும் கூறப்படுகிறது.

பி. டி. ஸி.

---

## சைகோனுக்கு அருகே கடும் சண்டை

### வியட்காங்கியருக்கு பலத்தசேதம்

சைகோன், ஜன.3

வியட்னும் சமாதானமுயற்சிகள் பலநாடுகளிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சமயத்தில் தென் வியட்னமில் வியட்காங்கியருக்கும் அமெரிக்க துருப்புக்களுக்குமிடையே உச்சக்கட்டத்தில் சண்டை நடைபெற்று வருவதாக செய்திகள் கூறுகின்றன.

தென்வியட்னமில்சைகோனுக்கு சுமார் நூறு மைல் தூரத்தில், வியட்காங்கியருக்கு எதிராக கடுமையான தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. அமெரிக்க, ஆஸ்திரேலிய, நியுஸிலாந்து துருப்புகள் தென்வியட்னம் துருப்புகளுடன் கூட்டுச்சேர்ந்து தாக்குதல்களை நடத்திவருகின்றன.

வியட்காங் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதென்றும் நூற்றுக்கணக்கானவர்கள் மாண்டிருக்கலாமென்றும் முதலில் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

### அமெரிக்க பாராதுருப்புகள்

இதற்கிடையே. அமெரிக்க பாரா துருப்புகள் வியட்காங்கியருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக சைகோனிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தோல்வியில்முடிவடைந்த கிறிஸ்மஸ் யுத்தநிறுத்தத்திற்குப்பின்னர், வடக்குவியட்னமில் அமெரிக்கா இன்னும் குண்டுவீசவில்லை.

---

## பிரிட்டிஷ் பிரதமரின் புதுவருடச் செய்தி

லண்டன, ஜன. 3

கடந்த வருடம் பிரிட்டனுக்குப் பெரும் சவாலாக இருந்தது என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்சன் தமது புது வருட ஒலிபரப்புச் செய்தியில் தெரிவித்தார்.

வியடநாம்போர், இந்தோ-பாகிஸ்தான் யுத்தம், ரொடீஷியா விவகாரம் ஆகியவற்றைப் பிரதமர் குறிப்பிட்டு இவற்ருல் எழுந்துள்ள துக்ககரமான நிலையை விளக்கியுள்ளார். வியட்னும் போர் காரணமாக மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்குமிடையே பெரும் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ள திரு. வில்சன், புது வருடத்தில் தாம் சோவியத் பிரதமரைச் சந்திக்கப் போவதாகவும் அதனல் சோவியத் யூனியனுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையே இணக்கம் ஏற்பட வழிபிறக்கும் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

---

## பத்திரிகைகளுக்கு பர்மாவில் தடை

ரங்கூன், ஜன. 3

பர்மாவில் வெளிநாட்டு செய்தி பத்திரிகைகள் தடைசெய்யப் பட்டுள்ளன. நான்கு கம்யூனிஸ்ட் சீனப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. இது மாதிரி நான்கு இந்திய பத்திரிகைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

---

## யுத்தம் நிற்காது?

டோக்கியோ, ஜன. 3

வியட்னும் போரில் வடக்குவியட்னமுக்கு வெற்றி கிடைக்கும் வரை இறுதிவரை போராடுவோம் என்று வடவியட்னும் அதிபர் ஹோ-சி-மின் ஜப்பான் பத்திரிகையொன்றுக்கு செய்தி அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது

---

## கௌரவப் பட்டம்

லண்டன், ஜன. 3

1966-ம் ஆண்டுக்கான கௌரவப் பட்டம் இலங்கையில் உள்ள இருவருக்கும் கிடைத்திருக்கிறது. திரு. வில்லியம் சில்கொக்குக்கு எம். பி. ஈ. பட்டமும் திரு. ரூவான் முகமது புக்கார ஹமினுக்கு பி. ஈ. எம். பட்டமும் கிடைத்துள்ளது.

1963 தொடக்கம் இலங்கையில் இருந்துவரும் திரு. சிலிக்கொக் பிரிட்டிஷ் பொதுக் கட்டிட அமைப்பு அமைச்சின் இலங்கைப் பிரதிநிதி ஆவர். கொள்ளுப்பிட்டியில் புதிய பிரிட்டிஷ் தூதுவராலய மாடிக் கட்டடம் இவருடைய கண்காணிப்பிலேயே கட்டி எழுப்பப்பட்டு வருகிறது. திரு. ஹமின் கொழும்பில் உள்ள இலங்கை வெளிச்சவீட்டுச் சேவைகள் சுப்பிரின்டன் அலுவலகத்தில் கடமை செய்துவருகிறர்.

---

## 'சாஸ்திரி சந்திப்பு பயனளித்தது

புதுடில்லி, ஜன. 3

அமெரிக்காவின் வியட்னும் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளவை என்று அமெரிக்க அதிபரின் விசேஷ தூதர் திரு. அவரல் ஹரிமன் நேற்று இங்கு பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

வியட்னும் மீதான அமெரிக்காவின் கொள்கைகளை திரு. ஹரிமன், நிருபர்களுக்கு விளக்கிக் கூறினர்.

---

## ஸிரியா புதியமந்திரிசபை

டாமாஸ்கஸ், ஜன. 3

ஸிரியாவின் புதிய நியமனப் பிரதமர் திரு. கலா—எடின் அல்—பிதார் நேற்று முன்தினம் புதிய மந்திரி சபையொன்றை அமைத்தார்.

ஸிரியா பிரதமர் டாக்டர் யூசுப் ஸியென் கடந்த டிசம்பர் மாதத்தில் ராஜினமா செய்ததைத் தொடர்ந்து திரு. சலா—எடின் அல்—பிதார் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார். பி. டி. ஸி

---

## சேமிப்பு கார்ப்பரேஷன்

பம்பலப்பிட்டி, திங்.

சேமிப்பு கார்ப்பரேஷன் ஒன்றை உருவாக்குவது பற்றி ஆராய்வதற்காக அரசாங்கம் ஒரு விசேஷகூட்டுக் கமிட்டியை நியமித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புகையிரதத்துக்கு கல் வீசப்பட்டது

அநுராதபுரம், திங்கள்
கொழும்பு— யாழ்ப்பாண புகைரதத்தில் பிரயாணஞ் செய்தவர்களில் பலர் கல்லெறிக்கு இலக்காகிக் காயமடைந்தனர். கலவீவா என்ற இடத்தை புகையிரதம் வந்தடைந்தபோது இராமவாசிகள் பலர் கல் வீசியதால் நால்வர் படுகாயமடைந்தனர். கலவீவாவைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் அநுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஒருவருக்கு இரண்டு பற்கள் உடைந்தன.

இதுசம்பந்தமாக அம்பன் பொல பொலிசார் எட்டுக் கிராமவாசிகளைக் கைதுசெய்துள்ளனர். காயமடைந்தவர் கல்லெறி விழுந்ததும் புகையிரத அதிகாரிகளிடம் தெரிவித்தனர். பொலிசாருக்குக்கிடைத்த தகவலைக் கொண்டு அவர்கள் இதுவரை எட்டுப்பேரைக் கைதுசெய்துள்ளனராயினும் தொடர்ந்தும் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

## 'புதிய கல்வி முறை'

நீர்கொழும்பு, திங்கள்
கடந்த காலத்தில் புத்தகப் படிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இருந்த கல்விமுறையினாலேயே நாட்டின் பொருளாதாரம் இவ்வளவு சீர்கெட்டுள்ளதென்றும், அதனாலேயே படித்த இளைஞர் பலர் வேலை வசதியற்று இருக்கின்றனரென்றும் நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா இங்குள்ள மொரகஸ்வீவ மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். விஞ்ஞான, செய்கைமுறை கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடியதான ஒரு கல்வி முறை விரைவில் சமர்ப்பிக்கப்படுமெனவும் நிதிமந்திரி தெரிவித்தார்,

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## மாணவருக்கு பண உதவி

அச்சுவேலி, திங்கள்
வடக்கு கிழக்கு மாகாணங்கள், மலைநாடு ஆகிய பகுதிகளிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருக்கும் திறமைசாலிகளான ஏழை மாணவர் மூவருக்கு பண உதவிசெய்ய அகில இலங்கை தமிழ் இளைஞர் சங்கம் முன்வந்திருக்கிறது. பெரும்பாலும் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களை அங்கத்தவர்களாகக்கொண்டதான இந்தமன்றம் நிதிதிரட்டும் முயற்சியில் தற்பொழுது ஈடுபட்டிருக்கின்றது சித்திரைமாதம் கலைவிழா ஒன்றை நடாத்தி கலைஞர்களைக் கௌரவிக்கவும் இச்சங்கம் முடிவுசெய்திருக்கிறது.

## உடுப்பிட்டியில் வரவேற்பு

பருத்தித்துறை, திங்கள்
ஐக்கியநாடுகள் சபைக் கூட்டத்தில் இலங்கைக் கோஷ்டியின் தலைமைப்பிரதிநிதியாகக்கலந்துகொண்டு ஈழத்தின் புகழை உலகறியச் செய்து திரும்பியுள்ளயாழ்ப்பாண எம். பி.யும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு வடபகுதியில் உள்ள சகல தொகுதிகளிலும் வரவேற்புகள் நடாத்த ஏற்பாடாகி இருப்பதாகத் தெரியவருகிறது.

உடுப்பிட்டித் தொகுதி மக்கள் சார்பாக நடைபெறவிருக்கும் வரவேற்பை ஊர்வலத்துடன் புலோலியன் எல்லை அம்பாள் ஆலய முன்றலில் நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பு, திங்கள்
இதுவரை காலமுமபாவிக்கப்பட்ட மட்டக்களப்பு பஸ் நிலையத்தை கார்கள் நிறுத்தும் நிலையமாகமாற்றி பஸ் நிலையத்தை பாட்டாளிபுரத்திற்கு மாற்றப்போவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது, புதிய இடத்திற்கு பஸ்நிலையம் மாறுவது மட்டக்களப்பு நகரசபையினரின் நெடுங்கால மூயற்சியாகும்,

## துப்பாக்கிச்சூட்டுக்கு ஒருவர் பலி

யாழ்ப்பாணம், செவ்
பூநகரியைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பூநகரியிலுள்ள வயலொன்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். பளை காரியாதிகாரி இதுசம்பந்தமாக விசாரணை நடத்தினார். யாழ்ப்பாணம் உதவிபொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஏ. ஜே. இடமல் கொட, யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்டிரேட் திரு. கதிரவேற்பிள்ளை ஆகியோர் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை செய்தார்கள். இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## மாணவர்மலர்

இதுவரை காலமும் செவ்வாய்க் கிழமைகளில் வெளிவந்த "மாணவர் மலர்" பகுதி, இவ்வாரம் முதல் வாரந்தோறும் வெவ்வேறு தினங்களில் வெளியாகும். ஒவ்வொரு கிழமையும் போயாதினத்துக்கு முந்திய நாளில் "மாணவர்மலர்" வெளிவரும். இவ்வார "மாணவர்மலர்" நாளை புதன் கிழமை வெளியாகும்.

## விசாரணைஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.
நீர்வேலியைச் சேர்ந்த சிவகுருநாதன் என்பவரைச் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த அவரது மைத்துனரான பொன்னுத்துரை சிவானந்தன் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. கி. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோப்பாய் பொலிசார் வழக்கைத் தொடர்ந்திருந்திருந்தனர். எதிரி சார்பில் திரு ரி. கணேசலிங்கம் திரு. எஸ். வி. கதிரவேலுவின் அனுசரணையுடனி ஆஜராகிருர். 27-10-65-ல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றிய செல்வி அழகராணி சாட்சியமளித்தார். அப்போதிக்கரி ஞாபகததிலிருந்தேசாட்சியமளிப்பதை அவதானித்து மாஜிஸ்டிரேட் ஆஸ்பத்திரி டிக்கட்டைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டு 5-1-66-க்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

## பிக்குவின் எச்சரிக்கை

மாத்தறை, திங்கள்
இலங்கையைஆக்கிரமித்த அன்னிய நாட்டவர்கள்மலைநாட்டைத் தம்வசமாக்குவதற்கு முன் கரையோரப் பகுதிகளைத்தான் முதலில் பிடித்தார்கள். தமிழ்மொழி உபயோக (விசேஷ) மசோதாவை அமுல் நடத்தும்போது மிகவும் அவதானமாக இருந்து கொள்ளுமாறு நான் தேசிய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன்.

இவ்வாறு தியாகொட கிராமசபையுன் மாதாந்தக் கூட்டத்தில் வண வெலதோட்ட பன்னநாசிதேரோ பேசுகையில் குறிப்பிட்டார்.

கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ரத்நாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வண பன்னநாசி தேரோ மேலும்பேசுகையில் இம்மசோதா நிறைவேற்றப்பட்டால் தமிழர்கள் மலைநாட்டிலும் தமது செல்வாக்கை [illegible] எனத் தெரிவித்தார்.

## 'கூட்டுறவு இயக்க அறிக்கையை தமிழிலும் வெளியிடுக'

யாழ்ப்பாணம், செவ்.
'இலங்கை கூட்டுறவுஇயக்கத்தைப்பற்றிய 1963-ம், 64-க்குரிய அறிக்கை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்துள்ளது. அவ்வறிக்கை தமிழில் வெளியிடப்படாதது ஒருபெரும் குறையாகும்'

இவ்வாறு வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடான 'கூட்டுறவு' பத்திரிகையின் ஜனவரி முதலாந் திகதிய வெளியீட்டில் 'தமிழில் அறிக்கை இல்லாதகுறை' எனும்தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

புள்ளிவிபரங்கள் உடைய விஷயங்களையும், மற்றைய விஷயங்களையும், எவ்வளவில் முன்னேற்றம் இருந்திருக்கிறது என்ற மதிப்பீட்டையும் பிரசுரிப்பதற்குக் காரணம், இயக்கத்தினுள்ளும் மக்கள் சபையிலும் ஆராய்வை எழுப்புவதற்கே.

பதினூறு லட்சம் கூட்டுறவாளர்களில் ஐந்து லட்சம் கூட்டுறவாளர்கள் தமிழ் பேசும் கூட்டுறவாளரென ஓரளவு மதிப்பிடலாம். இந்நாட்டில் வடக்கிலேயேகூட்டுறவு உயிருள்ள இயக்கமாக இருந்து வருகிறது. கூட்டுறவு இயக்கம் மக்கள்இயக்கமாக வளர்ச்சியடையவேண்டுமாக இருந்தால் ஆணையாளரது அறிக்கைகள் தேசிய பாஷைகளாக இரண்டிலும் வெளியிடப்படவேண்டியது அத்தியாவசியமாகும். கிராமாபிவிருத்தி, சிறுகைத்தொழில் அதிபர் தனது அறிக்கையை மூன்று பாஷைகளிலும் வெளியிட்டதை மெச்சுவதுடன் அவரைப் பின்பற்றிக் கூட்டுறவு ஆணையாளரும்மூன்றுபாஷைகளிலும் அறிக்கைகளை வெளியிட வேண்டுமென வேண்டுகிறோம்.

## சனசமூகநிலைய உபவிழா சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவு சனசமூகநிலையங்களின் உபவிழாச்சபைக் கூட்டம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சென்ற பல ஆண்டுகளாக அரசாங்க நன்கொடைப் பணமின்றி இயங்கிவந்த இப்பகுதி நிலையங்களுக்கு மீண்டும் நன்கொடைப் பணம் கிடைக்கச் சமாசம் முயற்சிஎடுத்துள்ளதென்றும் சமாசவிழாக்களில் பங்குபற்றும் நிலையங்கள் விசேஷவிதமாக நன்கொடைப்பணத்தைப் பெற வழிகிடைக்குமெனவும் இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்த சமாசச்செயலாளர் திரு. த. துரைசிங்கம் கூறினார்.

உபவிழாச்சபையினராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. போல்ராஜ், உபதலைவர் திரு. ஆ. மாட்டீன், காரியதரிசி: திரு. சூ. அமிர்தநாதர், உபகாரியதரிசி: திரு. பா. ஞானசபாபதி, தனாதிகாரி திரு. நீ. எஸ்தாக்கி, நிர்வாகசபையினராக திருவாளர்கள் வ. முருகேசு, இ. செல்வமாணிக்கராசா, கணேசன், க. சோமசுந்தரம், க. துரைச்சாமி, எஸ். நடராசா, ச. கயிலாசபிள்ளை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அரசாங்க ஊழியருக்கு சலுகை

பம்பலப்பிட்டி, திங்கள்
சிங்களத்தில் தேர்ச்சி பெருதவர்களை அவர்களது 55வயதுக்குமேலும்தொடர்ந்தும் கடமையாற்ற இப்போது அனுமதியளிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சமீபத்திய மந்திரிசபையின்முடிவைத் தொடர்ந்தே இவ்விதம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு பற்றி சகல நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாகா தலைவர்களுக்கும் அறிவித்தல் செய்துள்ள திறைசேரிக் காரியதரிசி திரு. ஜினதாசா சமரக்கொடி மேலும் இது சம்பந்தமான அறிவித்தல்கள் விரைவில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

சிங்களத்தில் தேர்ச்சி பெருதவர்கள் தமது 55வது வயதுக்குப்பின் கடமையாற்ற அனுமதிக்கப்படமாட்டார்களென 1963-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் முந்திய அரசாங்கம் அறிவித்திருந்தது.

## இலங்கைக்குமுதலிடம்

பம்பலப்பிட்டி, திங்கள்
இலங்கையிலுள்ள திறந்தவெளி சிறைச்சாலை இவ்வித சிறைச்சாலைகளுக்குள் முதலிடம் வகிக்கிறது எனலாம் என்று ஜெருசலம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் திரு. ஐ. டி. ரட்கின் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள திரு. ரட்கின், சிறைக் கமிஷனர் திரு. எப். டி. எல். ரத்நாயக்காவைச் சந்தித்து சிறைச்சாலைப் புதுமுறைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

இலங்கையிலுள்ள திறந்த வெளி சிறைச்சாலைபற்றி ஐ. நா. வில் தாம் சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரில் குறிப்பிடவிருப்பதாக திரு. ரட்கின் தெரிவித்துள்ளார்.

அளவிடப்பட்ட
## தேசிய அபிவிருத்தி வரி கிடைக்கும்

பம்பலப்பிட்டி, திங்.
தேசிய அபிவிருத்தி வரி அறவிடப்பட்ட அரசாங்க ஊழியர்களிடம் அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகையை கூடிய விரைவில் வழங்குமாறு வருமான வரி இலாகா கமிஷனர்சகல அரசாங்க இலாகாக்களுக்கும் அறிவித்தல் செய்துள்ளார்.

## கிடைக்கப்பெற்றேம்

திருவாதிரை மலர்

வெளியீடு:- ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானம், காரைநகர்.
பக்கங்கள்:- 110.
விலை: ரூபா 1.00.
கிடைக்குமிடம்:- ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம், காரைநகர்.

செந்தமிழாலும், சிவநெறியாலும் சேர்த்துக் கோவை செய்யப்பட்ட திருவாதிரை மலர் கிடைக்கப்பெற்றேம். ஈழம், தமிழகம் ஆகிய இருநாட்டு அறிஞர்களினதும் கட்டுரைகள் மலரைக் கவினுக்குகின்றன. சங்கநூற்செல்வர் சு. அருளம்பலவனார், பண்டித வித்துவான் திரு. க. கி. நடராஜன். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. . லஷ்மணன் எம். ஏ; திரு. க, வை. ஆத்மநாதசர்மா. முதலியார் குல. சபாநாதன், பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், வித்துவான் முருகேசன் போன்றோரின் கருத்துநிறைந்த கட்டுரைகள் படிப்போர்க்கு மிக்க பயனளிக்கும்.

—பூ

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத
திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி

### கொழும்பு

செவ். 4-1-66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-25 திருவெம்பாவை — மாணிக்கவிநாயகர் கோவிலில் இருந்து அஞ்சல், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 திருவெம்பாவைவிளக்கம், 7-10 திருப்பாவை, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர்.

இரவு கிராமசஞ்சிகை, 6-45 வீணைஇசை, 7-15 பேச்சு, 7-30 குதூகலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாடகம், 10-00 நேயர் விருப்பம்.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
பார் மகளே பார்



நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
பணக்காரக் குடும்பம்


## விளையாட்டுப் பகுதி

# இ. போ. ச. வெற்றி

யாழ்ப்பாணம், செவ். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.பிரதேசக்கோஷ்டிக்கும், அரியாலை சனசமூக நிலையத்தின் 'பி' பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இ. போ. ச. கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

இடைவேளைக்கு முன் முதலில் கோல்போட்டவர் அரியாலை கோஷ்டியைச் சேர்ந்த கனகலிங்கமாவர். இதையடுத்து இ. போ. ச. கோஷ்டியின் இடது முன்னணி வீரர் ஒரு கோல் போட்டார். இடைவேளையின்போது இரு கோஷ்டிகளும் ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தன. இடைவேளையின் பின்னர் போக்குவரத்துச்சபைக் கோஷ்டி அபாரமாக அரியாலைக் கோஷ்டியைச் சுற்றிவளைத்தது. மகாதேவா என்னும் முன்னணி வீரர் பலதடவை முயற்சிசெய்து வெற்றிகரமாக ஒரு கோலைப்போட்டார். அரியாலைக் கோஷ்டியினர் பல தடவைகள் கோல்போட முயற்சித்தும் பலனளிக்கவில்லை. இதற்குக் காரணம் இ. போ. ச. கோஷ்டிக் கோல்காப்பாளரின் திறமையான விளையாட்டாகும்.

ஒருசில நிமிடங்களுக்குப் பின்னர் இ.போ.ச. கோஷ்டியின் வலது முன்னணி வீரர் மற்றுமொரு கோலை வெளுத்துவாங்கினர் இடைவேளைக்குப் பின்னர் அரியாலை ஒருகோலும் போடவில்லை. எனினும் பின்னணி வீரர்களான பிரேமசுந்தரம் பி. தவநாதன் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாக இருந்தது. இப்போட்டி முடிவில் இ. போ. ச. கோஷ்டியினர் 3—1 கோல்களால் அரியாலை சனசமூக நிலைய 'பி' பிரிவுக்கோஷடியினரைத் தோற்கடித்தனர். இப்போட்டி அரியாலை சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்றது.

## மணிவாசகர் விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ். மணிவாசகர் விழா காரைநகர் சிவன்கோவில் வசந்த மண்டபத்தில் நேற்று ஆரம்பமாகிறது. விழா தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறவிருக்கின்றது.

### இன்றைய நிகழ்ச்சிகள்

தலைவர் திரு. ந. சபாரத்தினம் (அதிபர் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்).

6-30 திருவாசகத் திருமுறை ஓதல், 6-45 தலைமைப் பேருரை. 7-00 'ஏட்டில் ஏறிய வாசகம்'— திரு. மு. வைரமுத்து, 7-40 சங்கீத கதாப்பிரசங்கம் 'தெய்வ நீதி'—வண்ணை ஸி. எஸ். ஒஸ் மணிபாகவதர், 9-10 தலைவர் நிறைவுரை, 9-15 திருவாசகத்திருமுறை ஓதல்.


REGAL—JAFFNA
NOW SHOWING
Sandra Dee - Peter Fonda
in
TAMMY
and the
DOCTOR
(Estman Color)


## யாருக்கும் வெற்றியில்லை

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணம் அரியாலை சனசமூக நிலைய 'பி' பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், உரும்பராய் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டபோட்டியில் இருபிரிவினரும்திறமையாக விளையாடி போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஆட்டம் ஆரம்பமாகி முடியும்வரை இரு கோஷ்டிகளுமே ஒன்றையொன்று விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். இடைவேளைக்கு முன்னர் முதலாவது கோலை அரியாலை சனசமூகநிலையத்தைச்சேர்ந்த பி தவநாதன் வெளுத்துவாங்கினர். இதையடுத்து வலது முன்னணி வீரரும் சூட்டோடுசூடாக மற்றொரு கோலைப் போட்டார். உரும்பராய் விளையாட்டுக்கழகத்தின் மத்திய முன்னணிவீரர் வெகுதுரிதமாகத் தமது கோஷ்டிக்கும் ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இடைவேளையின்போது அரியாலை 2 கோல்களும், உரும்பராய் ஒரு கோலும் பெற்றிருந்தன. இடைவேளைக்குப்பின் நடந்த போட்டியில் அரியாலைக் கோஷ்டிக்கு ஒரு பெனல்டி கிடைத்தது. இதைப் பயன்படுத்தி அரியாலை ஒரு கோல் பெற்றுக் கொண்டது. இக்கோஷ்டியைச் சேர்ந்த பி. தவநாதன் மற்றுமொரு கோலைப் போட்டார். எனினும் கடைசி நேரத்தில் உரும்பராய்க் கோஷ்டியின் விளையாட்டு அபாரமாகக் காணப்பட்டது. அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டனர். வலது முன்னணிவீரர்களின் ஆட்டம் அருமையாகவிருந்தது. இரு கோஷ்டியும் தலா 4—4 கோல்கள்பெற்று இப்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டி உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


வெற்றிகரமான 2வது வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
வீரக்காவியத்தின் விடிவிளக்கு
வெற்றித் தமிழகத்தின் பேசும் பெண் தெய்வம்
கற்புக்கரசி கண்ணகியின் வரலாறு!



மேகலா பிக்சர்ஸ அளிக்கும்
கருணநிதியின்
பூம்புகார்
எஸ் எஸ். ஆர். — விஜயகுமாரி
கே பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.
டைரக்ஷன் — நீலகண்டன்.
கதைவசனம் —மு. கருணநிதி
இசை — சுதர்சனம்.


4.1.66


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொங்கிறீட் மிக்சர் விற்பனைக்கு. பாவித்த பாக்கர் கொங்கிறீட் கலவையந்திரம், லிஸ்டர் எஞ்சின், மொடல் 5 ஜி. ஒரு நடையில் 7 கன அடி கலக்க கூடியது. சிறந்த நிலையில் உள்ளது. சமாச வேலைநாட்களில் பார்வையிடலாம். வாங்கவிரும்புவோர், தபால் மூலம் 10-1-66-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். தலைவர், வலிகாமம் மேற்கு, ப. நோ. கூ. ச. சமாசம், சங்கானை. 1675

நல்ல நிலைமையிலுள்ள (CE 2244) சவுளற் லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. மயில்வாகனம், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம், 1683

பேர்க்குஷன் 55 SRI 358 இலக்கமுடைய ரெயிலரும் ஒருசோடி 12. 4 / 11-28 ராக்ரர் ரையரும் விற்பனைக் குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். எல்லாம்நல்ல நிலைமையிலுண்டு. க. பொன்னுச்சாமி, மனேச்சர், பல்லவராயன்கட்டு. 1680

பொங்கல் வாழ்த்துக்கள் ஏராளமான சைஸ்களில் குறைந்த விலைகளில் வேகமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. உடனே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள். தமிழ்ப்பண்ணை, 193, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம். 1679

நல்ல நிலையிலுள்ள ''கொலாரோ'' ரெக்கோட் பிளேயர் விற்பனைக்குண்டு. ரூபா 250. விபரங்களுக்கு: ஸ்ரீ இராமனுதன், பலாலி வீதி, கோண்டாவில். 1684

### காணவில்லை

த. பூபாலராசா (V858357) பூ. திவாகரன் (I 548323) இலக்கக் கூப்பன்கள் காணவில்லை. கண்டெடுப்பவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும். 1685

### தேவை

வர்த்தகர் ஒருவருக்குஉடனடியாக ரூபா 50,000/- பணமாகத்தேவை. யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள ஒரு காணியும் சினிமா தியேட்டரும் ஈடாகவைக்கப்படும். விபரங்களுக்குஎழுத்துமூலம் விளம்பர இல.1677ஈழநாடு மேற்பார்த்து என எழுதவும். 1677

ரிங்கர் (Tinker) வேலையில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. விண்ணப்பிக்கவும்: வின்ஸ்லோஸ், 149, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 1657

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

G.C.E. (சாதாரணம்) விஞ்ஞானபாடங்களும், பூமிசாஸ்திரம், மற்றும் கலைப்பாடங்களும், எண்கணிதம், ஆங்கிலம், தமிழ், சிங்களம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன. கீழ் வகுப்புகளும் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். கணிதக் கல்லூரி, No 2, வைரவ கோவில்வீதி, வண்ணர் பண்ணை (டாக்டர் சண்முகரெத்தினம் டிஸ்பென்சரிக்கு முன்னல்) 1678


## சென்மேரிஸ் வென்றது

நாவாந்துறை, செவ். நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட 'பி' பிரிவுக்கும் யாழ்ப்பாணம் தபால் ஊழியர் கோஷ்டிக்குமிடையேநடைபெற்றசிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ்கோஷ்டி வெற்றியீட்டியது. இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் சென்மேரிஸ் கோஷ்டி 2 கோல்களும் பின்பு நடந்த போட்டியில் ஒரு கோலும் போட்டு தபால் ஊழியர்கோஷ்டி ஒரு கோலும் எடுக்காவண்ணம் வெற்றியீட்டியது. சென்மேரிஸ் கோஷ்டியைச் சேர்ந்த அன்ரன், மரியதாஸ் ஆகிய வீரர்கள் முறையே ஒன்றும் இரண்டுமாக வெளுத்துவாங்கினர். தபால்ஊழியர் கோஷ்டியில் ஜேக்கப் புலேதிரன், ஜேசுதாஸன் ஆகியோரின் விளையாட்டு பாராட்டத்தக்கதாகும். போட்டிமுடிவில் சென்மேரிஸ் 3—0 கோல்களால் தபால் ஊழியர் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டி வைத்தீஸ்வர வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

## உத்தியோகத்தர்களுக்குப் பிரிவுபசாரம்

பரந்தன், வெள்ளி ''பொதுசன சேவைக்கெனத் தயாராகும் உத்தியோகத்தர்கள் சாதி சமய பேதங்களின்றிக் கடமையாற்றவேண்டும். அப்போதுதான் பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள்.''

கடந்த ஆறுவருடங்களாகக் கரைச்சிப் பகுதியில் 22 கிராமமுன்னேற்றச் சங்கங்களின் மேற்பார்வையாளராக இருந்து மன்னர்ப் பகுதிக்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களின் மேற்பார்வையாளராக இடமாற்றலாகிச் செல்லும் திரு. எஸ். கந்தசாமிக்கும், கண்டாவளை கிராமசேவகராக இருந்து நெடுந்தீவுக்குக் கிராம சேவையாளராக மாற்றலாகிச்செல்லும் திரு. பி. இராசகதிரவேலுவுக்கும் காரியாதிகாரி கந்தோரில் லிகிதர்களாகக் கடமையாற்றிப் புத்தளம் கச்சேரிக்கு மாற்றலாகிச்செல்லும் திரு. எஸ். ஏச். பெரேராவுக்கும், யாழ்ப்பாணம் கச்சேரிக்கு மாற்றலாகிச் செல்லும் ஸ்ரீ கே. கிருஷ்ணசாமி ஐயருக்கும் அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் காரியாதிகாரி திரு. எச். ஈ. பிள்ளைநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், மக்களாகிய நாம் எல்லோரும் சமமானவர்கள் என்றும் எம்மில் ஏற்றத் தாழ்வு கிடையாதென்றும் சொன்னர்.

பம்பலப்பிட்டி, திங்கள் வெளிவிவகார அமைச்சினல் முற்ருகத் தடைசெய்யப்பட்டிருந்த 'ரத்ததிலகம்' தற்போது சில பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டு திரையிட அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கும்

## தமிழ் எம். பி. க்களிடம் கல்வி மந்திரி உறுதி

யாழ்ப்பாணம், செவ். இலங்கையிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளின் கல்விநிலைபற்றியும், குறிப்பாக வடகுகிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளின் கல்விப்பிரச்னை பற்றியும் காங்கேசன் துறை எம், பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையில் சென்ற எம். பிக்கள் கோஷ்டியொன்று பிரதம மந்திரியையும் கல்விமந்திரியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது. மேற்படி எம். பிக்கள் கோஷ்டியில் வட்டுக்கோட்டை, நல்லூர், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த எம். பிக்களும், நியமன எம். பி. திரு. தொண்டமானும் அங்கம் வகித்தனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது கல்விமந்திரியின் நிரந்தரக்காரியதரிசி வித்தியாதிபதி ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

வெளிமாகாணங்களிலுள்ள தமிழ்ப்பிள்ளைகள் கல்விகற்பதற்குப் போதிய வசதியில்லையென்றும், கொழும்பிலும் வேறு இடங்களிலும் தமிழ்வகுப்புக்கள் குறைக்கப்பட்டுள்ளனவென்றும் தமிழ்வித்தியாதரிசிமாருக்கு போதியளவு பதவி உயர்வு கொடுப்பதில்லையென்றும் எம். பிக்கள் இப்பேச்சுவார்த்தையின் போது, பிரதமருக்கும், கல்வி அமைச்சருக்கும் சுட்டிக் காட்டினர்.

காலையில் சிங்கள வகுப்புகளும், மாலையில் தமிழ் வகுப்புகளும் நடைபெறும். தென்னிலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு சிங்களவரே தலைமையாசிரியராக இருப்பதால், தமிழ்வகுப்புகளில் பிள்ளைகளைக் கூட்டுவதற்குத் தடைசெய்கிறார்களென்றும், தமிழ்ப்பிள்ளைகளைக் கூடுதலாகச் சேர்த்துக்கொண்டால் சிங்களவர்களாகிய தாம் தலைமை ஆசிரியராக இருக்கமுடியாதென்ற காரணத்தினாலேயே இப்படிச்செய்கிறார்களென்றும் எம். பிக்கள் விளக்கமாக நிலைமையைத் தெரிவித்தனர்.

இவ்வருடம் ஜனவரி 7-ம் திகதி பாடசாலை தொடங்கும் போது இலங்கையிலுள்ள தமிழ்ப்பிள்ளைகள் எல்லாருக்கும் பாடசாலைகளில் இடம் கொடுக்கப்படுமென்றும், மீண்டும் நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கு இம்மாதம் 21-ம் திகதி கூடி ஆராய்வதென்றும் கல்வி மந்திரி தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள தமிழ் பாடசாலைகள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக உதவி வித்தியதிபதி ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு கல்விஇலாக்காவில் தமிழ் உதவி வித்தியாதிபதி எவரும் இல்லையென்றும், யாழ்ப்பாண மாவட்டத்தில் போதியளவு வித்தியாதரிசிகள் இல்லையென்றும் எம். பி. க்கள் கோஷ்டி சுட்டிக் காட்டியது. கல்வி மந்திரி இதனை ஏற்றுக் கொண்டு இதுபற்றி பரிசீலனை செய்வதாகத் தெரிவித்தார்.

## சட்டங்களை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி

கள் அமைப்புக் குழுவை அமைத்தது. இந்தக் குழு கணிசமான அளவிற்கு ஆங்கிலச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளது. ஒவ்வொரு ஆங்கிலச் சட்டச் சொல்லிற்கு பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் கண்டு 'ஏ' முதல் 'டி' வரை சட்ட அகராதிச் சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆங்கிலச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை மட்டும் தொகுப்பதைவிட, ஆங்கிலச் சட்டச் சொற்களுக்குரிய பொருள் விளக்கமும் சேர்த்துத் தருதல் நல்லதென இக் குழு கருதியது. அதன்படி ஆங்கிலத்தில் 'ஏ' முதல் 'என்' வரையுள்ள சட்டச் சொற்களில் மொழிபெயர்ப்பும் விளக்கவுரையும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசு, ஆட்சிமொழி சட்டக் கமிஷன் ஒன்றை அமைத்துள்ளது. அதே போல், தமிழக அரசும், ஆட்சிமொழி சட்டக் கமிஷன் ஒன்றை ஏற்படுத்தக் கருதியுள்ளது. இந்தக் கமிஷனில் சட்ட நிபுணர்களும், தமிழ்ப் பேரறிஞர்களும் இடம் பெறுவார்கள். இக் கமிஷன், ஆங்கிலச்சட்டச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலையை விரைந்து முடிக்கும். அத்துடன் சட்டங்களை மொழி பெர்க்கும் வேலையிலும் கவனம்செலுத்தும், நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும், தமிழில் நடைபெறுவதற்கான வாய்ப்பு விரைவில் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

(முற்றும்)

## புயல் பயம் நீங்கியது

சென்னை, ஜன. 3 சென்னை நகரத்தை கடந்த இரு தினங்களாகச் சுற்றிவளைத்த புயல்காற்று பெரும் சேதமெதையும் ஏற்படுத்தாமல் தமிழ் நாட்டைவிட்டுக் கடந்து சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது இப்புயல் காற்று ஆந்திரப்பிரதேசத்தில் வீசுவதாகவும் கடற்கரைப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## பாண்டிருப்பில் பொங்கல்விழா

மட்டக்களப்பு, திங்கள் கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த பாண்டிருப்புக் கலாமன்றத்தார் பொங்கல் விழாவாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

பொங்கல் தினமான 14-ந் திகதி அன்று காலை 7 மணிக்கு ஆண்களுக்கான 52 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, 7-30க்குப் பெண்களுக்கான 5 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, வினோதஉடைப் போட்டி, வினோதவிற்பனவு முதலியன நடத்தப்படும். நாடக இசைப்போட்டிகளும் நடத்தப்படும்.

## பாரபட்சம்?

யாழ்ப்பாணம், செவ். 'ஒன்பது சிங்களப் பரிசோதகர்கள் நியமிக்கப்படும் போது ஒரு தமிழ்க் கூட்டுறவுப் பரிசோதகரை மாத்திரம் அரசாங்கம் நியமிக்கிறது. இந்த ரீதியிலே உத்தியோக உயர்வும் வழங்கப்படுகிறது எனவும் தெரிய வருகிறது' என வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் தலைவர் சபையின் வருடாந்த [illegible] தெரிவித்துள்ளார்.

# டாஷ்கண்டில் அயூப் - சாஸ்திரி

டாஷ்கண்ட், ஜன. 3 பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும், இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியும் இன்று டாஷ்கண்ட் வந்து சேர்ந்தனர். திரு. சாஸ்திரிக்கும், திரு. அயூப்புக்கும் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றன.

திரு. அயூப் 30 பிரதிநிதிகளுடன் டாஷ்கண்ட் வந்து சேர்ந்தார். சாஸ்திரி, அயூப்பின் படங்கள் பிராவ்டா, இஸ்வெஸ்தியா பத்திரிகைகள் பிரபல்யமாக பிரசுரித்திருந்தன.

## நாளை இங்குவரும்..,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

விமானநிலையத்திலிருந்து திரு. பொன்னம்பலம் ரதம் போல் அலங்கரிக்கப்பட்ட மோட்டார்காரில் பவனியாக மயிலிட்டி கரையோர வீதிவழியாக அழைத்துவரப்பட்டு காங்கேசன் துறை வெளிச்சவீட்டுச் சந்தியை அடைந்து அங்கிருந்து காங்கேசன் றை வீதிவழியாக கொக்குவில் சந்திக்குவந்து திரும்பி திருநெல்வேலிச் சந்தியை அடைந்து அங்கிருந்து கந்தர்மடம் வந்து ஆனைப்பந்தி வழியாக வைமன்ரோட்டிலுள்ள அவரது வாசஸ்தலத்துக்குசெல்லப்படுவார்.

அன்று மாலைதிரு. பொன்னம்பலம் நாச்சிமார் கோவிலடியிலிருந்து காங்கேசன் துறை வீதிவழியாக வண்ணார்பண்ணை சிவன்கோவிடிக்கு அழைத்துவரப்பட்டு கன்னாதிட்டி வீதி, கஸ்தூரியார்வீதி, ஸ்டான்லி வீதி, மானிப்பாய் வீதிவழியாக சிவன்கோவிலைவலம் வந்து மீண்டும் காங்கேசன் துறை வீதியை அடைந்து பஜார் வடக்கு, தெற்கு வீதிகள் வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து கோட்டை மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார். அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

இவ்வரவேற்பு வைபவத்தின்போதுவாணவேடிக்கை, மேளக் கச்சேரிகளும் இடம் பெறுமாம்.

## கிரிக்கெட் டெஸ்ட்

### ஆஸி: 1—131

மெல்போர்ன், ஜன. 3 ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் நான்காவது நாளான இன்றுஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 131 ஓட்டங்கள் எடுத்தது. மழை காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. ஆஸி. வீரர் சிம்ஸன் 67ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 558 ஓட்டங்கள் எடுத்தது. ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 338 ஓட்டங்கள் எடுத்தது. நாளை செவ்வாய்க்கிழமை இறுதி நாளாகும்.

## ஹரிமன்

புதுடில்லி, ஜன. 3 அமெரிக்காவின் வியட்னும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து பல நாட்டுத் தலைவர்களுடனும் பேச்சுகள் நடத்திவரும் ஜனதிபதி ஜோன்ஸனின் விசேஷ தூதர் திரு. அவரல் ஹரிமன் நேற்றுப் புதுடில்லியிலிருந்து தெஹ்ரானுக்குப் பயணமானார்.

# "வான் - பஸ் போட்டியே உயிரைப் பலிவாங்கியது,,

யாழ்ப்பாணம், செவ் இந்த துர்அதிஷ்டமான மரணம் யாழ்ப்பாணப் பகுதியில் பஸ் சேவைக்கும், வான் சேவைக்குமிடையிலுள்ள போட்டிகாரணமாகவே ஏற்பட்டுள்ளது. வான்கள் பஸ்களுடன் போட்டி போட்டுக்கொண்டு செல்லும் காட்சிகளை யாழ்ப்பாணத்தில் சர்வ சாதாரணமாக காணலாம். யாழ்ப்பாணப்பகுதியில் அண்மையில் பஸ் சேவை திருத்தமடைந்த போதிலும் இந்த சட்ட விரோதமான வான் சேவைகள் தொடர்ந்து நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதியிலும் சட்ட விரோதமாகவுள்ள வான் சேவை மீது பொலிசார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பளையைச் சேர்ந்த ஜீப் சாரதி பியசேன (வயது 44) என்பவரின் மரண விசாரணையின்போது யாழ்ப்பாண மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்

மேற்படி மரண விசாரணையின்போது பொன்னையா திருஞானம் சாட்சியமளிக்கையில் டிராக்டர் ஒன்றை, வேகமாக வந்துகொண்டிருந்த வானென்று விலத்த முயற்சித்தபோது நடந்து வந்துகொண்டிருந்த பியசேனவுடன் வான் மோதிக்கொண்டதென்றும் அதனால் அவர் தலையில் பலமான அடி ஏற்பட்டு கீழேவிழுந்தாரென்றும் கூறினார்.

ஜே.எம்.ஓ. டாக்டர் எஸ். சுப்பிரமணியமும் சாட்சியமளித்தார்.

வான் சாரதி சந்தவனம் நடராசாவை 10-1-66வரை விளக்கமறியலில் வைக்கும்படியும், 10-1-66 அன்று சாவகச்சேரி கோர்ட்டில் ஆஜர் செய்யப்படவேண்டுமென்றும் மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

மூளை சிதறுண்டதால் ஏற்பட்டமரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# அரசாங்கவர்த்தககூட்டுஸ்தாபனம் நிறுவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய் அரசாங்க வியாபார கூட்டுஸ்தாபனம் ஒன்று நிறுவப்படவேண்டுமெனக் கோரும் பிரேரணை ஒன்று ஜனப்பிரதிநிதிகள்சபை இம்மாதம்9ந்தேதி கூடும்பொழுதுகொண்டுவரப்படவிருக்கிறது. லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமனும் இப்பிரேரணையை கூட்டாக சமர்ப்பிப்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்கள்.

அந்தப் பிரேரணை கூறுவதாவது:-

அத்தியாவசியமான பொருட்களனைத்தினதும் இறக்குமதியை ஏற்று நடாத்துவதற்கும், ஏற்றுமதி வியாபாரத்திலும் அதன் முயற்சிகளை விஸ்தரிப்பதற்குமெனக் காலதாமதமின்றி அரசாங்க வியாபாரக் கூட்டுஸ்தாபனமொன்று நிறுவப்படவேண்டுமென இச்சபை கருதுகிறது.

திருட்டு, மோசடி, லஞ்சம் வாங்குவது அல்லது கொடுப்பது ஆகிய காரணங்களுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களையும், சிறைத் தண்டனை, அபராதம்பெற்றவர்களையும் பிரதிநிதிகள் சபை, செனட்சபை, உள்ளூராட்சிச் சபைகள் ஆகியவற்றுக்குஅங்கத்துவம் கேட்கும் உரிமை ஆயுட்காலம் முழுவதும் இல்லாமற்செய்யும் பொருட்டுதேர்தல் சட்டத்தைத் திருத்தக்கோரும் பிரேரணை ஒன்றுக்கும் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. டி. பி. ஆர். விஜயசேகரா இதற்கான முன்னறிவித்தலைக் கொடுத்துள்ளார்.

ஹானேய், ஜன. 3 ஆளில்லாத அமெரிக்க விமானமொன்று நேற்று முன்தினம் வடக்கு வியட்னமில் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருவாசக விழா

யாழ்ப்பாணம், செவ். கிளிநொச்சி சிவநெறிக் கழகத்தின் ஆதரவில் நாளை மாலை கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் திருவாசக விழா நடைபெறவிருக்கிறது. கிளிநொச்சி எம். பி. பண்டிதர் திரு. கா. பொ இரத்தினம் உட்பட வேறு பலரும் சிறப்புரை நிகழ்த்துவார்.

'புராணங்கள் சமயஅறிவு வளர உதவி' என்ற கருத்தரங்கும் பண்டிதர் இரத்தினம் தலைமையில் விசேஷ நிகழ்ச்சியாக இடம்பெறும்.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் திருவெம்பாவை 8-ம் நாளான இன்று காலை 5 மணிக்கும் இரவு 7-30 மணிக்கும் திருவெம்பாவை உற்சவம் நிகழும். மாலை 6 மணிமுதல் 7 மணி வரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் மாணிக்கவாசகர் கதாப்பிரசங்கத் தொடரில் ''திருவாசகம் தில்லைப்படி சேர்தல்'' என்னும் பொருள்பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.


## தேவை

சங்குவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. தராதரம்: கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சியில் சித்தியடைந்தவர். பிணைக்காசு ரூபா 1000/- ஆதனப்பிணை ரூபா 2000/- சம்பளம் ரூபா 80 — 100 வரை. தகுதிக்கேற்ப சம்பளம் கொடுக்கப்படும். தராதர நற்சாசிப் பத்திரங்களுடன் தலைவர், சங்குவேலி நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு 10-1-1966க்கு முன் கிடைக்கக்கூடியதாக மனுப்பண்ணவும். 1689

## விசேட வகுப்பு

11-2-66 நடக்கவிருக்கும் எண் கணிதப் பரீட்சைக்கு விசேட பயிற்சி வகுப்பு இருபாலாருக்கும் நடைபெறுகின்றது. விண்ணப்பிக்கவும். கணிதக் கல்லூரி நம். 2 வைரவ கோவில் வீதி, வண்ணார்பண்ணை (டாக்டர் சண்முகரத்தினம் டிஸ்பென்சரிக்கு முன்னால்) 1687


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org